©
தமிழ்நாடு அரசு
2011

கையெழுத்துத் தொடர்

# நிதித் (ஓய்வூதியம்) துறை

## அரசாணை எண்:76, நாள் : 28.02.2011

*(மாசி–16, திருவள்ளுவர் ஆண்டு 2042)*

குழு காப்பீட்டுத் திட்டம் – மக்கள் நலப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் குழு காப்பீட்டுத் திட்டம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆணை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் பணியாற்றும் மக்கள் நலப் பணியாளர்களுக்கு, தமிழ்நாடு அரசு ஊழியர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் குழு காப்பீட்டுத் திட்டத்தினை விரிவுபடுத்த வேண்டும் என வரப்பெற்றுள்ள கோரிக்கையை அரசு கனிவுடன் பரிசீலித்து, அதனை ஏற்பது என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2. மக்கள் நலப் பணியாளர்களுக்கான, குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் குழு காப்பீட்டுத் திட்டத்தை கீழ்க்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | நடைமுறை |
|---|---|
| 1 | ஏனைய குழு காப்பீட்டுத் திட்டங்களைப் போன்று, இக்குழு காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. |
| 2 | மக்கள் நலப் பணியாளர்களுக்கான ஒரு புதிய குழு காப்பீட்டினை (Master Policy) இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் (Life Insurance Corporation of India) துவக்கும் பொருட்டு, பிரிமியத் தொகையை கணக்கிட்டு, 2011–2012ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு அனுப்புமாறு கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். |
| 3 | 2011–2012ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர், இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்திற்கு பிரிமியத் தொகையை செலுத்தி, புதிய குழு காப்பீடு துவக்க கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். |
| 4 | இத்திட்டத்திற்கு, மக்கள் நலப் பணியாளரிடமிருந்து, குழு காப்பீடு துவக்கப்படும் மாதத்திலிருந்து, மாதம் ஒன்றிற்கு ரூ.30/– வீதம் அவர்கள் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும். |
| 5 | குழு காப்பீடு துவக்கப்படும் நாளுக்குப் பின்னர் மக்கள் நலப் பணியாளர் இறக்கும் நேர்வில் அவர்தம் குடும்பத்தினருக்கு உதவித் தொகையாக ரூ.1,50,000/– வழங்கப்படும். |

| வ.எண். | நடைமுறை |
|---|---|
| 6 | ஏனைய குழு காப்பீட்டுத் திட்டங்களுக்கான பிற விதிமுறைகள் இந்நேர்விற்கும் பொருந்தும். |
| 7 | குழு காப்பீட்டு பிரிமியத்திற்காக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் தொகையில், மக்கள் நலப் பணியாளர்களிடமிருந்து பெறப்படும் சந்தாத் தொகைபோக மீதமுள்ள தொகை அரசின் பங்களிப்பாக இருக்கும். |
| 8 | குழு காப்பீட்டு பிரிமியத் தொகைக்கான செலவு கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:– <br><br> “2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்– 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்கள்–110 ஏனைய ஈட்டுறுதித் திட்டங்கள்–I திட்டத்தில் சேராதது –BU தொகுதிக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு பிரிமியத் தொகை கொடுத்தல் –10 பங்குத் தொகைகள் –02 காப்புறுதிக் கட்டணம். <br><br> (டிபி கோடு எண். 2235 60 110 BU 1024)” |

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. சண்முகம்**
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்.
கருவூல கணக்கு இயக்குநர், சென்னை– 600 015.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை– 9 / 18 / 35/ மதுரை.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–600 006.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மண்டல இணை இயக்குநர்கள், கருவூலக் கணக்குத் துறை.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து சார் கருவூல அலுவலர்கள்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை (தெற்கு/ கிழக்கு/ வடக்கு)

<u>நகல் பெறுநர்:</u>
நிதி (வரவு செலவு–I/ வரவு செலவு– பொது/ பொது/ஊ.வ)த் துறை, சென்னை– 600 009.
முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சரின் செயலாளர்கள்,
முதுநிலை மண்டல மேலாளர், இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம், சென்னை–2.
இருப்புக் கோப்பு / உபரி நகல்

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்